In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti
Deposition of Witness

| | |
|---|---|
| D.V.C: | 29/2023 |
| RW: | 2 |
| பெயர்: | ஆறுமுகப்பாண்டியன் |
| த/பெ: | ஆறுமுகப்பாண்டியன் |
| கிராமம்: | தெற்கு பொம்மையாபுரம் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 10.02.2026**

**சாட்சி நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) 1ம் எதிர்மனுதாரர் எனது தங்கை மகன் ஆவார். 1ம் எதிர்மனுதாரர் தற்போது எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் கோவில்பட்டியில் அன்னை தெரசா நகரில் குடியிருந்து வருகிறார்.

2) நான் குடியிருந்து வரும் ஊருக்கும் 1ம்எதிர் மனுதாரர் வசிக்கும் வீட்டிற்கும் சுமார் 23 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். மனுதாரரும் 1ம் எதிர் மனுதாரரும் அவர்கள் விருப்பப்பட்டு பெரியோர்களால் பேசி முடிக்கப்பட்ட திருமணம் என்றால் சரிதான்.

3) எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் பத்தி 3 முதல் 9 வரையுள்ள சங்கதிகள் அனைத்தும் 1 ம் எதிர் மனுதாரர் கூறி எனக்கு தெரியும் என்றால் சரிதான். மனுதாரரும் 1ம் எதிர் மனுதாரும் அடிக்கடி சண்டை போட்டது சம்பந்தமாக நான் சமரசம் செய்ய சென்றுள்ளேனா என்றால் சென்றுள்ளேன்.

4) எந்த தேதியில், எந்த மாதத்தில் பிரச்சனை ஏற்பட்டது என்றும் யார், யார் சமரசத்திற்கு சென்றோம் என்று நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டு

கூறவில்லை என்றால் சரிதான். நானும் எனது மச்சானும் சென்றோம். எனது நிரூபண வாக்குமூலத்தில் பத்தி எண்.8ல் திருமணத்தின் போது மனுதாரருக்கு 25 சவரன் நகைகளை காவல்நிலையத்தில் நல்ல முறையில் பெற்றுக்கொண்டதாக நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன் விசாரணையின் போது நான் உடன் இருந்தேனா என்றால் இல்லை.

5) விசாரணைக்கு பிறகு நான் எந்த சாட்சி கையெழுத்து போடவில்லை என்றால் சரிதான். மனுதாரரை அவரது வீட்டிற்கு 1ம் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ அழைக்க எப்போது சென்றோம் என்றும் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

6) 1ம் எதிர் மனுதாரர் எனது உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.